# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் ‘A+’தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024**


தொலைபேசி : 0431- 2407016/ 2407060
தொலை நகலி: 0431 - 2407444

**முனைவர் சு.சீனிவாசராகவன்**,எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்ஸி., பிஎச்.டி., மின்னஞ்சல்: coe@bdu.ac.in
தேர்வு நெறியாளர் (பொ) வலைதளம் : www.bdu.ac.in


---

**ந.க.எண்:தே.நெ.அ./இளநிலை/நவம்பர் 2022/செய்முறைத்தேர்வுகள் /2022 நாள்: 28.09.2022**

பெறுநர்

முதல்வர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
இணைவு பெற்ற கல்லூரிகள் (Non-Autonomous)

அய்யா/அம்மையீர்

**பொருள்**: இளநிலைத் தேர்வுப் பிரிவு – நவம்பர் 2022 - இளநிலைப் பட்டபடிப்பு பாடங்களுக்கான அக மதிப்பெண்களை பதிவேற்றம் செய்வதற்கும், செய்முறைத் தேர்வுகள் நடத்துவவதற்கும் தேர்வுக் கால அட்டவணை – தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை**: துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்: 27.09.2022.

* * * * * *

பார்வையில் காணும் துணைவேந்தர் அவர்களின் ஆணையின்படி, பாரதிதாசன் பல்கலைககழக இணைவு பெற்ற கல்லூரிகளில் (தன்னாட்சி தவிர) இளநிலைப் பட்ட மாணாக்கர்களுக்கான நவம்பர் 2022 பருவத் தேர்வுக்குரிய செய்முறைத் தேர்வுகள் நடத்துவது தொடர்பாக பின்வரும் கால அட்டவணைப்படி செய்முறைத் தேர்வுகள் நடத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| வ. எண் | பாடப்பரிவுகள் | செய்முறைத் தேர்வுகள் துவங்கும் நாள் | செய்முறைத் தேர்வுகள் முடிவுறும் நாள் | அக மதிப்பெண்கள் மற்றும் செய்முறைத் தேர்வு மதிப்பெண்களை இணையத்தில் பதிவேற்றம் செய்யக் கடைசி நாள் | எழுத்துத் தேர்வுகளின் அகமதிப்பெண்கள் இணையத்தில் பதிவேற்றம் செய்யக் கடைசி நாள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | B.A./B.B.A./B.Com. | 17-10-2022 | 19-10-2022 | 22-10-2022 | 11-11-2022 |
| 2. | B.Com(C.A.) | 17-10-2022 | 22-10-2022 | 26-10-2022 | 11-11-2022 |
| 3. | B.Sc. | 17-10-2022 | 05-11-2022 | 07-11-2022 | 11-11-2022 |

**செய்முறைத் தேர்வுகள்** (Practical exams for B.A., B.B.A., B.Com., B.Sc. Courses) நடத்திடும் பொருட்டு அதற்கான செய்முறைத் தேர்வுக் கால அட்டவணையை மூன்று நகல்கள் தயார் செய்து **10-10-2022 ஆம் தேதிக்குள்** இவ்வலுவலகத்திற்குக் உடன் அனுப்பி ஒப்புதல் பெற்ற பிறகே செய்முறைத் தேர்வுகளை நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. **காலதாமதமாகக் கிடைக்கப் பெறும் தேர்வுக்கால அட்டவணைகள் பரிசீலிக்கப்படாது எனத் தெரிவிக்கலாகிறது.**

பல்கலைக்கழக ஒருமை / இருமைப் பருவச் (ODD /EVEN Semester) செய்முறைத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணாக்கர்கள் அந்தந்தப் பருவத்தேர்வில் மட்டும்தான் செய்முறைத் தேர்வுகளைச் (Practical Examinations) செய்ய இயலும். இதனைத் தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவ / மாணவிகளுக்கும் தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நெடுவரிசை எண்:5இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, செய்முறைத் தேர்வு மதிப்பெண் பட்டியல்களைத் தயார் செய்த அகத்தேர்வாளர்கள் மற்றும் புறத்தேர்வாளர்களது பெயர் மற்றும் முகவரி ஆகிய விவரங்களுடன் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அதேநேரத்தில் மதிப்பெண்களைப் Portal-ல் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

மேலும், நெடுவரிசை எண்:6இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, எழுத்துத் தேர்வுகளுக்கான அகமதிப்பெண்களை உரிய காலத்திற்குள் https://exams1.bdu.ac.in -ல் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

**பதிவேற்றம் செய்யப்படும் அனைத்து மதிப்பெண்களின் அச்சுப்பிரதிகள் எடுத்து அலுவலக நகலாகப் பராமரிக்க கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

தேர்வு நெறியாளரின் ஆணையின்படி, நவம்பர் 2022 செயமுறைத் தேர்விற்கு நியமனம் செய்யப்பட்ட புறத்தேர்வாளர் தேர்வுப் பணிக்கு வர இயலாத நிலை ஏற்படின், அந்தந்த கல்லூரி முதல்வர்கள் மற்றும் துறைத்தலைவர்கள் அருகாமையில் உள்ள பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் பணியாற்றும் பல்கலைக்கழக பணிமூப்புப் பட்டியலில் உள்ள ஆசிரியர்கள் / தகுதி பெற்ற துறை ஆசிரியர்களைப் புறத்தேர்வாளர்களாக நியமனம் செய்து செய்முறைத் தேர்வை நடத்தி முடிக்கவும் கேடடுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் மதிப்பெண்களை பதிவேற்ம் செய்து மாணாக்கர்களுக்கு தேர்வு முடிவுகளை சரியாகவும் / விரைவாகவும் அளித்திட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டமைக்கு உடன் ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**தேர்வு நெறியாளர்**(பொ)